# மு.மேத்தாவின் கவிதைகளில் சமுதாயம்

***சே.சா. அல் அமீன்***
தலைமை ஆசிரியர்
ஹிதாயத்துல் இஸ்லாம் துவக்கப் பள்ளி
கடையநல்லூர்

**மலர்: 4**

**இதழ்: 1**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2019**

**ISSN: 2454-3993**

## *ஆய்வுச் சுருக்கம்*

*தமிழ்க்கவிதை நீண்ட வரலாற்றைக் கொண்டது. பாடுபொருளாலும், வடிவத்தாலும் நிரம்ப மாற்றங்களை அது பெற்று வந்துள்ளது. புதுக்கவிதை என்பது இருபதாம் நூற்றாண்டில் அது பெற்றிருக்கும் புது வடிவமாகும். புதுக்கவிதைத் துறையில் குறிப்பிடத்தக்க கவிஞர் மு. மேத்தா ஆவார். இவருடைய கவிதைகளில் சமுதாயமும், அரசியலும் பற்றிப் பாடப்பட்டுள்ள விதத்தை இந்த ஆய்வுக் கட்டுரை ஆராய்கிறது.*

### அறிமுகம்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மரபைமீறி எழுதவேண்டும் என்ற முயற்சியில் ந.பிச்சமூர்த்தி போன்ற தமிழ் இலக்கிய முன்னோடிகள் ஈடுபட்டனர். மணிக்கொடி, எழுத்து, ஆகிய இதழ்கள், புதுக்கவிதை வளர்ச்சிக்கு உதவின. தொடக்ககாலப் புதுக்கவிதைகள் அனைத்தும் தனிமனித உணர்வுகளையே மையப்படுத்தி எழுந்தன. கோவையில் தொடங்கப்பட்ட வானம்பாடி என்னும் இதழ், சமுதாய நோக்கம் கொண்ட கவிதைகளை வெளியிட்டது குறிப்பிடத்தக்கது. வானம்பாடி இதழில் வெளிப்பட்ட கவிஞர்களில் ஒருவராக மு.மேத்தா திகழ்கிறார். மேத்தாவின் கவிதைகளில் சமுதாயம் பற்றிய சிந்தனைகள் பரவலாகப் பாடப்பட்டுள்ளன.

சமுதாயத்தின் அடையாளம் நாட்டு நிலைமை. மேத்தா படைத்துள்ள பல கவிதைகள் நாட்டின் அரசியல், சமுதாயம், பொருளாதாரம், பண்பாடு ஆகியவற்றில் உள்ள நிறைகுறைகளைச் சுட்டிகாட்டுகின்றன. மேலும் அரசியல் அநீதிகள், சமுதாய சண்டைகள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், பண்பாட்டுச் சீர்குலைவுகளை நீக்குவதற்கான தீர்வுகளை அவர் தனது கவிதைகளின் மூலம் எடுத்துரைத்துள்ளார்.

சமுதாயத்தின் மூல அங்கம் வீடு. வீடு நலமாயிருந்தால் நாடு நலம் பெறும். நாட்டை போலவே வீட்டையும் மேத்தா ஆய்வு செய்கிறார். குறிப்பாக, குடும்ப சிக்கல்கள், பெண்களின் திருமணம் தொடர்பான செய்திகள், முதிர்கன்னிகளின் அவலங்கள், வரதட்சணைக் கொடுமை, கணவனால் பெண் படும் துன்பங்கள், பிள்ளை வளர்ப்புமுறை போன்றவற்றை மேத்தா கவிதைகளில் எடுத்துரைத்துள்ளார். மேலும், வீடு சிறப்புற அமையும்போது தான் நாட்டின் கட்டமைப்பு சிறக்கும் என்பதையும் மேத்தா சுட்டிக்காட்டுகிறார். தமிழில் புதுக்கவிதைகளின் தரத்தை உயர்த்தியவர்களில் ஒருவராக மேத்தா கருதப்படுகிறார். இருப்பினும் அவருடைய கவித்துவத்தை வினாவுக்குரியதாக சில திறனாய்வாளர்கள் ஆக்கியுள்ளனர். எடுத்துக்காட்டாக, "முப்பத்தைந்து வயதான எந்த குடிமகனும் இந்தியகுடியரசு தலைவராகும் வாய்ப்பு இருப்பது போல, மு. மேத்தாவும் எதிர்காலத்தில் என்றாவது கவிதை எழுதக்கூடும்" என்ற விமர்சகர் வெங்கட்சாமிநாதனின் கூற்று, ஒரு கடுமையான குற்றச்சாட்டாகத் தான் தோன்றுகிறது. எண்ணற்றவர்களால் சிறந்த கவிஞர் என்று பாராட்டப்படும் மேத்தா இவ்வாறு இகழப்படுவது பொருத்தமில்லாததாகத் தோன்றுகிறது. அவர் நாட்டையும் சமுதாயத்தையும், அரசியலையும் எவ்வாறு பாடுகிறார் என்பதைக்கொண்டு அவருடைய கவித்துவத்தையும், சமுதாயப் பொறுப்புணர்ச்சியையும் ஆராய்வதே ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

### மேத்தா காலத்து இலக்கியச் சூழல்

தமிழ் இலக்கியம் நீண்ட மரபினை கொண்டதாகும். நமக்குக் கிடைத்துள்ள இலக்கியங்களைக் கொண்டு கணக்கிட்டால், அது மூவாயிரம் ஆண்டுகள் வரை நீள்கிறது. தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல், அதற்கு முன்னிருந்த காலத்தில் எழுந்திருக்கக்கூடிய இலக்கிய வளத்தைப் புலப்படுத்துகிறது. நெடிய வரலாற்றைக் கொண்டிருந்தபோதும் தமிழ்க்கவிதை, காலத்திலும், வடிவத்திலும், மற்றும் பாடுபொருளிலும் மாறிக்கொண்டே வந்திருக்கிறது.

காலத்தால் நிகழும் மாற்றங்களை உள்வாங்கிக்கொண்டு புதுமையாக எழுதப்படும் படைப்பே புதியதாகிறது. ஏனையவையெல்லாம் போலச்செய்தல் என்னும் குறைக்கு ஆட்பட்ட புற்றீசல் பெருக்கங்களேயாம். இத்தகைய புற்றீசல் கூட்டம் போன்ற நூல்கள் காலத்தை வென்று நிற்பதில்லை. "சோதனை முயற்களும் புதுமை வேட்கைகளும் இல்லாத இலக்கியத்துறை வீழ்ச்சியை நோக்கியே செல்கிறது" என்று கார்லைல் குறிப்பிடுகிறார்[1]. இத்தகைய சோதனை முயற்சிகளாலேயே தமிழ்க்கவிதை காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு வந்திருக்கிறது.

இருபதாம் நூற்றாண்டில் யாப்பு மரபை மீறிப் பல புதிய பரிசோதனை முயற்சிகள் நிகழ்ந்தன. மேலைநாட்டு இலக்கிய அறிமுகங்களும், உலகளாவிய செய்தித் தொடர்புகளும் இதற்குக் காரணங்களாயின. மரபுரீதியான படைப்புகளில் இருந்து விலகி, புதிய இலக்கியங்களை உருவாக்கும் போக்கு வந்தது. தனிமனித வாழ்க்கை, சமுதாயப் போக்கு, இவையிரண்டு ஒன்றோடொன்று ஒத்துப்போக முடியாத அந்நியத்தன்மை ஆகியவற்றைப் பற்றியெல்லாம் ஆங்கில இலக்கியங்கள் ஆராயத் தொடங்கின. இன்னொரு புறம் பொருளாதாரச் சுரண்டலுக்கு எதிரான புரட்சி, அதன் விளைவாகப் படைக்கப்பட்ட பொதுவுடைமைச் சமூகத்தின்

மலர்ச்சி, மனிதனை மனிதன் இன, நிற வேற்றுமைகளால் அவமானப் படுத்துவதை எதிர்த்து நடந்த கிளர்ச்சி ஆகியனவும் கவிதையில் புதிய பொருளாக விரிவடைந்தன.

வானம்பாடிக் கவிஞராக தோன்றி மானுடம் பாடும் கவிதைகளை நிறைய எழுதியிருப்பவர் மு. மேத்தா ஆவார். மணிக்கொடி, எழுத்து இயக்கக் கவிஞர்களைப் போலில்லாமல், எதையும் சமுதாய நோக்கோடு எழுதுகிறவர் மேத்தா. மரபுரீதியான தமிழிலக்கிய அறிவு பெற்றவராக இருந்ததால் தமிழ்த்தன்மை வாய்ந்த புதுக்கவிதைகளை இவர் படைத் திருக்கிறார். எளிமை, தமிழ்த்தன்மை, சமுதாய பொறுப்புணர்ச்சி, மனிதநேயம், கலந்துபோர்க்குணம், அழகிய சொல்லாட்சி, சிறந்த படிமங்கள், பொருத்தமான குறியீடு கள் ஆகியவற்றால் மேத்தாவின் கவிதைகள் சிறந்து விளங்குகின்றன.

மேத்தா கவிதையின் பாடுபொருள், வடிவச்சிறப்பு ஆகிய இரண்டிற்குமே முதன்மை தந்திருக்கிறார். "புதுக்கவிதை வடிவத்தால் மட்டுமின்றி உள்ளடக்கத்தாலும் திருப்பத்தை உண்டாக்கியிருப்பதாக அறிஞர்கள் கருது கின்றனர்"[2]. "வடிவங்கள் மாறிக்கொண்டே வந்தது போலவே கவிதையின் உள்ளடக்கமும் மாறிக்கொண்டே வந்துள்ளது என்பது தெளிவு" என்று மூர்த்தி குறிப்பிடுகின்றார். மேத்தா பொருள் மாற்றம், வடிவமாற்றம் ஆகிய இரண்டினையும் விடாமல் செம்மையாக கையாண்டிருக்கிறார்.

மேத்தா சமுதாயப் பொறுப்புள்ள கவிஞர். தான் பாடும் கருத்துக்கள் மக்களை அடையவேண்டும் என்னும் ஆர்வம் அவருக்கிருந்தது. அதனால்தான் எளிமையைக் கையாண்டு தம்முடைய கவிதைகளை அவர் வடிக்கிறார். புதிய வாழ்க்கைப் போக்கையும், சமுதாய மாற்றங்களையும், அரசியல் புரட்சிகளையும் உற்றுநோக்கித் தம்முடைய படிப்புக்கு பாடுபொருளாக்கிக் கொண்டிருக்கிறார். சொந்த சிந்தனையைப் பாடும்போதுகூட சமுதாயத்தை மறக்காதவராக விளங்குகிறார்.

எழுத்து வடிவத்தில் இலக்கியம் தோன்றாத காலத்தில்கூட வாய்மொழி இலக்கியங்கள் தோன்றியிருந்தன. வெறும் ஓசைகளே கூட இலக்கியங்களாக பரிணமித்தன. மனித வரலாற்றின் ஆதிஇலக்கியங்களான இவற்றைப் புறக்கணித்தால் இலக்கிய வரலாறே முழுமையற்றுப் போகும். எந்த ஒன்றும் அது தோன்றும் காலத்தில் புதுமையானதாக இருப்பது இயல்பு. அந்த வகையில் இன்றைய புதுவடிவம் புதுக்கவிதையாகும். மேத்தா இந்த கருத்துடையவராகவே காணப்படுகிறார்.

***"இலக்கண***
***செங்கோல்***
***யாப்பு சிம்மாசனம்***
***எதுகை பல்லக்கு***
***மோனை தேர்கள்***
***பண்டிதப் பவனி***
***தனிமொழிச் சோதனை***
***இவையெதுவுமில்லாத கருத்துக்கள்***
***தம்மைத்தாமே ஆளக் கற்றுக்கொண்ட***
***புத்தி மக்களாட்சி முறையே புதுக்கவிதை" 3***

என மேத்தா புதுக்கவிதை பற்றி விளக்குகிறார். மரபுக்கவிதையை எழுதி அதற்குப்பின் புதுக்கவிதை துறைக்கு வந்தவர் மேத்தா ஆவார். எனவே மரபின் சிறப்புகளைப் புதுக்கவிதைக்கு எப்படி பயன்படுத்திக்கொள்ளலாம் என்று திட்டமிட்டு அவர் எழுதியிருக்கிறார். மேத்தாவின் கவிதை பின்புலம் அழகியல் கோட்பாடோடும், சமுதாயப் பொறுப்புணர்வோடும் அமைந்துள்ளன.

**மேத்தாவின் கவிதைகளில் நாடு**

எல்லா எழுத்துக்களுமே ஏதோ ஒரு வகையில் சமுதாயத்தைத் தழுவியனவாகவே இருந்து வந்துள்ளன. இத்தொடக்ககால மரபு இன்றுவரை பின்பற்றப்பட்டு வருகிறது. “பன்னூறு ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான புலவர்களால் ஆக்கப்பெற்று தமிழ்க் கவிதைகள் இந்த நூற்றாண்டில்வரலாறுகாணாதஅளவுக்குமக்களின் வாழ்க்கைச் சிக்கலை வெளிப்படுத்துவதில் சிறப்புடையனவாக விளங்குகின்றன” -என்று மு. வரதராசன்கூறுகிறார்[1]. மு. மேத்தாவின் கவிதைகள் சமுதாயத்தின் சன்னல்களாகவும் புரட்சியின் கதவுகளாகவும் திகழ்கின்றன[2].

மேத்தா, கவிதைகளில் தற்கால அரசியல், சமுதாயம், பொருளியல், கலைமற்றும் பண்பாடு ஆகியற்றைப் பிரதிபலிப்பதாகப் படைத்துள்ளார். ஒரு கவிஞனின் எண்ண ஓட்டங்கள் நாட்டோடும், மக்களோடும் தொடர்புடையனவாக அமையும்போதே இத்தகைய படைப்புகள் உருவாகின்றன. கவிஞனுக்கு அரசியல் தேவையா? எனும் வினா இன்னும் பலரால் எழுப்பப்படுகிறது. தொன்றுதொட்டு தமிழ்க்கவிஞர்கள் அரசியலைப்பற்றிப் பேசி வந்திருக்கிறார்கள். அரசியல் பற்றிய தெளிவான சிந்தனைகளை உடையவராக மேத்தா விளங்குகிறார். அன்னியர் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற இந்தியா அரசியல் ரீதியான மேன்மைகளால் புதிய சாதனையை படைக்கும் என்று அனைவரும் நம்பினர். மேத்தாவும் அப்படி எதிர்பார்த்தவர். தனிப்பட்ட எந்த அரசியல் கட்சியையும் சாராதவர் மேத்தா. சுரண்டல் நீங்கிய, ஆட்சி அதிகாரம் முழுவதையும் மக்களுக்கே பயன்படக்கூடிய, எதிர்கால நம்பிக்கையை ஊட்டவல்ல, ஊழலற்ற அரசியலை மேத்தா விரும்புகிறார். பாராளுமன்ற மக்களாட்சியை மேத்தா விரும்பி பின்வருமாறு வரவேற்று பாடுகிறார்.

**“ஜனநாயகம் பரவாயில்லை
எப்போதும்
ஒரு கோட்டுக்கு
உட்பட்டே இருக்கும்”[4]**

தனிநபர் சர்வாதிகாரத்தைவிடவும், மன்னராட்சியைவிடவும், பலமடங்கு சிறந்தது மக்களாட்சி. மக்களாட்சியில் வாக்கெடுப்பின் வாயிலாக ஆட்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதால் அதிகார கட்டுப்பாடும், தவறான ஆட்சி ஒழிக்கப்படுவதும், சாத்தியம் ஆகின்றன. தவறு செய்யும் ஆட்சியாளன் மறு தேர்தலில் தோற்கடிக்கப்படுவான் என்பதே மக்களாட்சியில் நம்பிக்கையூட்டும் தன்மையாகும்.

**“நம்முடைய சுதந்திரநாள்
வெள்ளை இருட்டை
வெளியேற்றிவிட்டு
கருத்த இருட்டை நாம்
கைபிடித்த நாள்
அந்நிய விலங்குகளை
அகற்றிவிட்டு
நாம் செய்த
சொந்த விளக்குகளையே
சுட்டிக்கொண்ட நாள்”[5]**

என்று மேத்தா எழுதுகிறார். இருப்பதற்குள் சிறந்த ஓர் அரசியல் அமைப்பு என்ற அளவில் மட்டுமே மக்களாட்சியை மதிக்கமுடிகிறது. அது இருக்கும் நிலையை மேத்தாவால் மதிக்க முடியவில்லை.

தேசப்பிதாவுக்கு ஒரு தெருப்பாடகனின் அஞ்சலி எனும் கவிதையில் காந்தியடிகளின் உயர்வினை நெகிழ்ச்சியுடன் மேத்தா எழுதுகிறார்.

**“எங்கள்தேசப்பிதாவே
அமைதி கொலுவிருக்கும்
உன் சிலைகளை
பார்க்கும்போதெல்லாம்**

**நான் அழுதுவிடுகிறேன்**
**கண்ணீர் வெப்பத்தால்**
**என்கவிதை**
**முழுமை பெறாமலே**
**முடிந்து விடுகிறது"[7]**

இந்தியாவை உயரத்த வேண்டும் என்பதற்காககாந்தியடிகள் எவ்வளவு முயன்றார் என்பதை இக்கவிதை வெளிப்படுத்துகிறது. விடுதலை பெற்று நீண்டகாலத்திற்குப் பிறகும் மக்களாட்சி முறையில் செம்மையில்லாமை, அவநம்பிக்கை தோன்றுமளவுக்கு சீர்கேடுகள் வளர்ந்துள்ளதைக் கண்டு வருந்திய மேத்தா, தம்முடைய வருத்தத்தையும் சலிப்பையும் பின்வரும் கவிதையின் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார்.

**"நாற்காலி**
**காலியாக இருக்கிறது**
**யார் வரப்போகிறீர்கள்**
**அவிழ்க்கத் தயாராகிவிட்ட**
**ஆயிரம் முட்டைகளில்**
**அழகிய பொய்களின்**
**வாசனை**
**வகுவதற்கானவழிகளைப்பற்றிமட்டுமே**
**ஒவ்வொரு நிமிடமும்**
**ஒருநூறுயோசனை**
**பரவாயில்லை வாருங்கள்**
**காலி செய்யத்தானே**
**வருகிறீர்கள்"[6]**

என்று எழுதுகிறார். ஆட்சிக்கு எவர் வந்தாலும் நன்மை நடக்கப் போவதில்லை என்னும் நடப்பியல் கசப்பை இக்கவிதை வெளிப்படுத்துகிறது. விரக்தியின் எல்லைக்கு மக்கள் செல்லக்கூடிய சுழலை இக்கவிதை உணர்த்துகிறது.

### மேத்தாவின் கவிதைகளில் சமுதாய சூழல்

அரசியல் சீர்குலைந்து கிடப்பதை வெளிப்படுத்திய மேத்தா, விடுதலை பெற்ற இந்தியாவில் சமுதாய சுழல் கெட்டுப்போய் இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறார். மேத்தாவின் கவிதைகள், அவரது காலத்தின் சிக்கல்களைப் பற்றிய சிந்தனைகளை விரிவாக சித்தரிக்கின்றன. சாதி வேற்றுமை இந்த நாட்டு மக்களிடையே எவ்வாறு ஏற்றத்தாழ்வுகளை உண்டாக்கி இருக்கிறது என்பதை நெகிழ்ச்சியுடன் மேத்தா பாடுகிறார்.

**"ராஜதானியில்**
**மலர்கிரீடங்கள்**
**சுட்டப்படுகிறபோது**
**சேரிக்குழந்தைகளின்**
**சின்னவிழிச் செடியில்**
**உப்புமலர்கள்**
**உதிர்ந்து விழுகின்றன"[8]**

என்று அவர் எழுதுகிறார். ஏழைகளுக்காகவும், தாழ்த்தப்பட்டவர்களுக்காகவும் இந்திய மக்களாட்சி பாடுபடும் எனும் உத்தரவாதத்துக்கு புறம்பாக மெலிந்தவர்கள் வஞ்சிக்கப்படும் நிலை வந்திருக்கிறது. சாதியைப்பற்றி தீர்க்கமான பார்வையை மேத்தா கொண்டிருக்கிறார் என்பதை அவரது கவிதைகள் காட்டுகின்றன.

**"சாதி என்பது**
**மனிதன் தன்முகத்தில்**
**தானே புசிக்கொண்ட**
**கரி**
**----**
**பெரியமனிதர்கள்**
**சிலருக்கு இது பெயர்ச்சொல்"[9]**

சாதியே காதல் திருமணத்திற்கு தடையாகும், சலுகைகள் கிடைக்கும்போது அதுவே பிரியத்துக்கு உரியதாகவும் ஆவதையும் சுட்டிக்காட்டுகிறார். கீழவெண்மணியில் குடிசைகள் கொளுத்தப்பட்ட கொடுமைக்கு சாதி காரணமான நிலையை விளக்குகிறார்.

**"அறிவுநெருப்பைப்**
**பொட்டலம்கட்டமுடியாமல்**
**இப்போது சாதிக் காகிதங்கள்**
**சாம்பலாகின்றன"[10]**

என்று நம்பிக்கையோடு நாட்டுநடப்பை அவர் நோக்குகிறார். தீண்டாமைக் கொள்கைகளை உலகத்தில் இருந்தே அப்புறப்படுத்த வேண்டும் என்று அறிவுரைக்கிறார். மேலும், மதநல்லிணக்கத்தைமையப்படுத்தி மேத்தா ஒரு தனிக்கவிதை நூலையே (மனிதனைத் தேடி) உருவாக்கி உள்ளார். இந்நூலில், ஆண்டவனைக் காப்பாற்றுவதற்காக ஆயுதம் ஏந்திய மனிதர்களிடம் அவன் சினம் கொள்கிறான்.

***“எனக்காக நீங்கள்***
***உங்களைப் பலியிடவில்லை***
***உங்களுக்காக***
***என்னை பலியிடுகிறீர்கள்”*** [11]

என்று ஆண்டவன் சினத்தோடு மதச்சண்டைக்காரர்களைப் பார்த்து பேசுவதாக மேத்தா எழுதுகிறார். மேலும், தேர்தல் நேரத்தில் ராமரும், பாபரும் உயிர்பெற்று வந்துவிடுகிறார்கள், மதநல்லிணக்கத்தை உண்டாக்குவதே அவர்கள் நோக்கம். இதைத் தாங்க முடியாத அரசியல்வாதிகள் அவர்களையே வீழ்த்துவதாக மேத்தா எழுதுகிறார்.

***“மலர்கள் உதிர்க்கும்***
***காற்றைக்கூட***
***மன்னிக்க மனம் வராது***
***மனிதர்களை உதிர்க்கும்***
***மதவெறியர்களுக்கு***
***மண்ணில் இடம் ஏது?”*** [12]

சமயங்களின் பெயரால் பிரிந்துகிடக்கும் மானுடத்தை ஒருக்கிளைக்கும் தீவிரத்தன்மை மேத்தாவின் எழுத்துக்களில் தெரிகிறது. இதனை

***“கலவரத்தை தொடங்குகிற***
***கைகளை நாம் கட்டுவோம்***
***ஒன்றுபட்டு வாழ்வதற்கு***
***உறவுப்பாலம் கட்டுவோம்”*** [13]

என்று குறிப்பிடுகிறார். இதுபோல, நாட்டின் அரசியல், சமுதாய நிலை, ஆகியவற்றில் நிலவும் சிக்கல்கள் மேத்தாவால் பாடப்பட்டுள்ளன. அரசியலில் நேர்மையின்மை, சமுதாயத்தில் ஒற்றுமையின்மை ஆகியவற்றை சித்திரிப்பதும், வருந்துவதும் அரிய செயல்களல்ல. இவற்றை அடியோடு களைவதற்கான வழிவகைகளை சுட்டிக் காட்டுவதே இன்றியமையாததாகும். இதை மேத்தா ஆற்றியிருக்கும் திறம் போற்றத்தக்கது.

## முடிவுரை

கவிஞன் என்பவன் தனக்குள்ளேயே உலவும் மனவெளி மனிதனாக இருந்து பயனில்லை. தான் வாழும் நாடும், தன்னைச் சார்ந்த உலகத்தையும் அவன் சிந்தித்தவனாக இருக்கவேண்டும். மேத்தா அவ்வாறு சிந்தித்திருக்கிறார் என்பதை இந்த ஆய்வுக் கட்டுரை எடுத்துகாட்டுக் கவிதைகளுடன் விளக்கியுள்ளது.

## குறிப்புகள்

1. கார்லைல், இலக்கிய சிதறல்கள், ப. 8.
2. கா. கைலாசபதி, தோணி வருகிறது, ப. 7.
3. மு. மேத்தா, நானும் என் கவிதையும், 1976, ப. 5.
4. மு. மேத்தா, ஊர்வலம், ப. 25.
5. மு. மேத்தா, அவர்கள் வருகிறார்கள், ப. 22.
6. மேலது, ப. 42.
7. மு. மேத்தா, கண்ணீர் புக்கள், ப. 24.
8. மேலது, ப. 37.
9. மு. மேத்தா, அவர்கள் வருகிறார்கள், ப. 36.
10. மேலது, ப. 41.
11. மு. மேத்தா, மனிதனைத் தேடி, ப. 8.
12. மேலது, ப. 56.
13. மேலது, ப. 115.